# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 ஏப்ரல் மாதம் 28 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

# நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ மின்சக்தி, எரிசக்தி, மாகாண வீதி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, சமூக நலன்புரி அத்துடன் நகர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் 2015.03.17 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)15/07)**

அ. கௌரவ அமைச்சர் நிமல் லான்சா அவர்கள் V ஆவது மாகாண சபைக் காலத்தினுள் விடயப் பொறுப்பு அமைச்சராக கடமையாற்றி தமது பதவியின் கடமைகளுக்காக வெளிநாடு சென்ற சந்தர்ப்பங்கள் எத்தனை ?

ஆ. வெளிநாடு சென்ற நாடு, தினங்கள் ? அதற்கு இணங்க வெளிநாட்டில் இருந்த நாட்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. அத் தினங்களில் கலந்து கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் எவை ?

ஈ. அமைச்சருடன் வெளிநாட்டுச் சுற்றுலாவில் கலந்துகொண்ட ஏனையவர்கள் யாவர் ?

உ. ஒவ்வொரு சுற்றுலாவிற்காகவும் செலவு செய்த நிதி எவ்வளவு ?

ஊ. சுற்றுலாவிற்காக செலவு செய்த மொத்த நிதி எவ்வளவு ?

எ. அச் சுற்றுலாக்களின் மூலம் மாகாண சபைக்கு கிடைக்கப் பெற்ற பலாபலன் யாது ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□/vi (1)15/11)**

அ. களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் பாடசாலை நலன்புரி நடவடிக்கைகளுக்காக 2015 மார்ச் 01 ஆந் திகதி தொடக்கம் பஸ் வண்டிகளுக்கு உரித்துள்ள பாடசாலைகள் எவை ?

ஆ. அவை பாடசாலைகளுக்கு எப்போது கிடைக்கப் பெற்றுள்ளன ?

இ. அவ் பஸ் வண்டிகளின் வகை மற்றும் இலக்கங்கள் யாவை ?

ஈ. அவ் பஸ் வண்டிகள் பாடசாலைகளுக்கு அரசிடமிருந்தா, பழைய மாணவர் சங்கத்திடம் இருந்தா அல்லது தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்தா கிடைக்கப் பெற்றுள்ளன என்பதனை வெவ்வேறாக காட்ட முடியுமா ?

உ. தனிப்பட்ட நன் கொடையாளர்களின் பெயர் அந் நன் கொடையாளர்கள் யார் என்பதனை பாடசாலைகளுக்கு இணங்க வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ?

ஊ. அப் பஸ் வண்டிகளில் பிரயாணத்தில் ஈடுபடக் கூடிய நிலைமையில் எத்தனை காணப்படுகின்றன ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(/vi (1)15/14)**

அ. கொழும்பு கல்வி வலயத்தின் தெமட்டகொட அநுறுத்த பெண்கள் பாடசாலை அதிபரின் முறைகேடான நடவடிக்கை மற்றும் ஒழுங்கற்ற ஒழுக்க சீர்கேடான நடவடிக்கைகளினால் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு இடையே குழப்பமும், பேதமும் ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதன் காரணமாக பாடசாலை நிர்வாகமும், பிள்ளைகளின் கல்வியும் சீரழிந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இவ் அதிபரின் பல முறைகேடான நடவடிக்கைகள் நீண்ட காலம் தொடக்கம் காணப்பட்ட போதும் அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

ஈ. இந்த அதிபருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறைகேடான குற்றச்சாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக விரைவாக உரிய விசாரணையினை மேற்கொண்டு தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக பாடசாலையில் சிறப்பாக கடமையாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்கு எதிராக ஏன் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது ?

உ. இந்த அதிபருக்கு எதிராக காணப்படும் முறைகேடுகள் தொடர்பான குற்றச் சாட்டுக்களை முன்வைத்து அதிகளவு காலம் கடந்துள்ள போதும் அது தொடர்பாக ஒழுங்கான ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று இது வரை எடுக்காமைக்கு உரிய காரணத்தை இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ ஹெக்டர் பெத்மகே உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(/vi (1)15/15)**

அ. மஹரகம வித்தியாதர மகளிர் பாடசாலையின் (திலம் மஹர ஆரம்பப் பிரிவு உள்ளடங்கலாக) தற்போது கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அவ் ஆசிரியர்களில் 2014.12.31 ஆந் திகதியில் அப் பாடசாலையிலே 10 வருடங்களை விட அதிக காலம் கடமையாற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனரா ?

இ. அப்படியாயின் அது எவ்வளவு ?

ஈ. அப்படிக் காணப்பட்டால் 10 வருடங்கள் அவ்விடத்திலேயே கடமையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் கொள்கையின் கீழ் அவர்களை ஏன் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யவில்லை ?

உ. அவ் ஆசிரியர்களை விரைவாக இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம் I

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு**

பிரேரணை :

இதற்கு முன்னர் எவ்வாறான முடிவொன்று எடுக்கப்பட்டிருந்த போதும் அதைக் கருத்திற் கொள்ளாது 2015.04.08 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட இணக்கத்தின் படி இன்றைய தினம் (2015.04.28) ஆந் திகதி கலைந்து சென்ற பின்னர் இச் சபை 2015.05.12 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு கூட வேண்டியதுடன் 2015.05.05 ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாக வேண்டும்.

**சபைக் கூட்டம் II**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு**

பிரேரணை :

2015.04.08 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட இணக்கத்தின் படி 2015.05.12 ஆந் திகதி சபைக் கூட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்து கலைந்து சென்ற பின்னர் இச் சபையானது 2015.05.26 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு கூட வேண்டியதுடன் 2015.05.19 ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாக கருதிச் செயற்பட வேண்டும்.

## X. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார நடவடிக்கை அமைச்சர் (மே.மா)**

*“மேல் மாகாண மாகாண சபையின் 2014 இன் ............. ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்டம் ”*

[இரண்டாம் முறை வாசித்தல்]

{ நியதிச் சட்ட நகல் பிரதி 2014.07.08 ஆந் திகதி முதலாம் முறை வாசிக்கப்பட்டது }

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

மேல் மாகாணத்தில் இவ்வேளையில் பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்களிடமிருந்து இடைக்கிடையே நிதி அறவிடப்படுகின்றது, முதலாம் தரம், ஆறாம் தரம், மற்றும் பன்னிரண்டாம் தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போதும் அதேபோல், வேறு வகுப்புக்களின் தேவைகளுக்காக பிள்ளைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்படுவதனால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ளனர் எனவே மேல் மாகாணத்தில் பாடசாலை பிள்ளைகளிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் நிதியினைச் சேகரிப்பதை (வசதிக் கட்டணத்தைத் தவிர) நிறுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi**

**(1)14/09)**

**02. கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

"மேல் மாகாண பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக பிள்ளைகளை சேர்க்கும் போது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பாதிப்புக்கு உட்படுத்தும் தற்போதைய முறையினைத் திருத்தும் தேவை தோன்றியுள்ளது. அதற்காக பிள்ளைகளை பாடசாலைக்கு ஆட்சேர்க்கும் தினம் தொடக்கம் ஒரு மாதம் நிறைவடைய முன் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பி நிறைவு செய்வது, பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றுபவர்களின் பிள்ளைகளின் பெயர்ப் பட்டியலை பிள்ளைகள் ஆட்சேர்க்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று வாரங்கள் நிறைவடைய முன் மாகாண சபைக்கு கிடைப்பதற்கு வழி செய்தல், அதிகாரத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் பெயர்ப் பட்டியலுக்கு இணங்க பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறையை இரத்துச் செய்தல், நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளுக்கு இணங்க உறுதியான ஆவணம் ஒன்றினை புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க தயாரிப்பதற்கும், பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு இணங்க பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும், இதற்கிணங்க மேல் மாகாணத்தின் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை ஒழுங்கு படுத்தி பாடசாலை ஒன்றுக்கு பிள்ளை ஒருவர் சேர்வதற்கு உள்ள மனித உரிமையை மாகாண மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது." **(பி/vi (1)14/10)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.04.08 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.